**<u>சுருக்கம்</u>**

பொதுப்பணிகள் - தமிழ்நாடு அமைச்சுப்பணி - பதிவுத்துறை - திரு.D.தினேஷ் கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளர் பதவியில் நியமனம் செய்யப்பட்டது - பணி வரன்முறை செய்து - ஆணை - வெளியிடப்படுகிறது.

---

**<u>வணிகவரி மற்றும் பதிவுத் (எம்.2)துறை</u>**

**அரசாணை (3D) எண்.6** **நாள் : 12.04.2023**

**சுபகிருது, பங்குனி -29,**

**திருவள்ளுவர் ஆண்டு, 2054.**

**படிக்கப்பட்டவை:**

1. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் நலன் மற்றும் வேலைவாய்ப்புத்துறை, நாள் 23.01.2020.
2. அரசாணை (டி) எண்.14, வணிகவரி மற்றும் பதிவுத்(கே)துறை, நாள் 24.01.2022.
3. பதிவுத்துறை தலைவரின் நடவடிக்கைகள் எண்.32613/கே2/2014, நாள் 21.04.2022.
4. பதிவுத்துறை தலைவரின் கடிதம் எண்.32613/கே2/2014, நாள் 30.01.2023.

---------

<u>ஆணை:</u>

பதிவுத்துறையில், ஈரோடு பதிவு மாவட்டம், அம்மாப்பேட்டை சார்பதிவாளர் அலுவலகத்தில் இளநிலை உதவியாளராகப் பணிபுரிந்து வந்தபோது, பணிக்காலத்தினிடையே 28.03.2008 அன்று இறப்புற்ற திரு.V.C.தனபால் என்பவரின் மனைவி திருD.பூங்கொடி தனது மகன் திரு.D.தினேஷ் என்பவருக்கு கருணை அடிப்படையில் பணிநியமனம் வழங்குமாறு 24.08.2009-ல் மனு அளித்தார் மற்றும் தனியர் திரு.D.தினேஷ் 23.12.2014 அன்று தனக்கு கருணை அடிப்படையில் பணிநியமனம் வழங்குமாறு மனு அளித்திருந்தார்.

2. கருணை அடிப்படையில் பணிநியமனம் கோரி விண்ணப்பித்த நாளில் தனியர் 18 வயது நிறைவடையவில்லை என்பதால், நடைமுறையில் உள்ள அரசாணைகளின்படி தனியருக்கு கருணையடிப்படையில் பணி நியமனம் வழங்கப்படவில்லை. இருப்பினும் தனியர் 18 வயது பூர்த்தியான நிலையில், மீண்டும் 23.12.2014 அன்று விண்ணப்பம் சமர்ப்பித்தபோது கருணை அடிப்படையில் பணிநியமனம் பெறத் தேவையான வயது பெற்றுள்ளதாலும், இரண்டாவதாகப் பெறப்பட்ட விண்ணப்பத்தினை ஏற்று, தனியரின் குடும்ப நிலையினை கருத்தில் கொண்டும், இந்நேர்வினை சிறப்பு நிகழ்வாக கருதி, தனியர் பொருட்டு வயது தகுதி மற்றும் மூன்றாண்டுகளுக்குள் விண்ணப்பிக்க வேண்டும் என்பது குறித்து மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் பத்தி 4-ற்கு விலக்களித்தும் மற்றும் தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம் 2016-ன் பிரிவு 20(6)(b)-யை தளர்த்தியும், காலஞ்சென்ற அரசு ஊழியர் திரு.V.C.தனபால் என்பவரது மகன் திரு.D.தினேஷ் என்பவருக்கு கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக பதிவுத்துறையில் பணிநியமனம் வழங்க பார்வை இரண்டில் படிக்கப்பட்ட அரசாணையில் பதிவுத்துறை தலைவருக்கு உரிய அனுமதியளித்து ஆணை வெளியிடப்பட்டது.

3. மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையின்படி, திரு.D.தினேஷ் என்பவர் கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராகப் பணிநியமனம் செய்யப்படுவதற்குரிய கல்வி மற்றும் வயது அனைத்து தகுதிகளைப் பெற்றிந்தபடியால், அவருக்கு கருணை அடிப்படையில் தற்காலிக இளநிலை உதவியாளராக மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட நடவடிக்கைகளில் பதிவுத்துறை தலைவரால் பணிநியமனம் செய்து ஆணை வழங்கப்பட்டுள்ளது. அதன்படி, திரு.D.தினேஷ் 12.05.2022 முற்பகல் முதல் இளநிலை உதவியாளராகப் பணியில் சேர்ந்து தொடர்ந்து பணிபுரிந்து வருகிறார். திரு.D.தினேஷ், இளநிலை உதவியாளர் என்பவரின் தற்காலிகப் பணியினை வரன்முறைப்படுத்துவதற்கு பதிவுத்துறை தலைவர் மேலே நான்காவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் அரசுக்கு செயற்குறிப்பினை அனுப்பியுள்ளார்.

4. பதிவுத்துறை தலைவரின் செயற்குறிப்பு அரசால் கூர்ந்தாய்வு செய்யப்பட்டு தமிழ்நாடு அமைச்சுப்பணியில், பதிவுத்துறையில், பழனி பதிவு மாவட்டத்தில், கருணை அடிப்படையில் தற்காலிக இளநிலை உதவியாளராகப் பணிநியமனம் செய்யப்பட்டுள்ள திரு.D.தினேஷ் என்பவரை 12.05.2022 முற்பகல் முதல் இளநிலை உதவியாளர் பதவியில்,

பணியிடத்திற்குரிய உடற்தகுதியினைப் பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு பணிவரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது. இவ்வாறு பணி வரன்முறைப்படுத்துவதால், தனியர். ஆண்டு ஊதிய உயர்வுகள் பெற உரிய விதியின்படி தகுதியுடையவராகிறார்.

5. இவ்வாணை, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறையின் அலுவல் சார்பற்ற எண்.1673/ட்டி1/2023, நாள் 10.03.2023 மற்றும் மனித வள மேலாண்மைத் துறையின் அலுவல் சார்பற்ற எண்.4312927/ஜி.1/2023, நாள் 24.03.2023-ல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

பா.ஜோதி நிர்மலாசாமி
அரசு செயலாளர்

பெறுநர்:

பதிவுத்துறைத் தலைவர், சென்னை-28.

✓ திரு.D.தினேஷ், இளநிலை உதவியாளர்,
பழனி பதிவு மாவட்டம். (பதிவுத்துறைத் தலைவர், சென்னை-28 வழியாக)

**நகல்:**

தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை, சென்னை-9.

மனித வள மேலாண்மைத் துறை, சென்னை-9.

இருப்புக் கோப்பு/உதிரி.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர் 12/4/2023

12/4/23